10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 258 செவ்வாய்க்கிழமை பெப்ரவரி 06 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## நாளை நள்ளிரவுடன் பிரசாரம் நிறைவு

கொழும்பு, பெப்.06

உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைகள் நாளை புதன்கிழமை நள்ளிரவுடன், முடிவுக்கு வர வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது. 341 சபைகளுக்கு 8,356 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக நடக்கும் இந்தத் தேர்தலில் நாடு முழுவதும் 43 அரசியல் கட்சிகள், 222 சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 57,252 பேர் போட்டியிடுகின்றனர்.

வரும் சனிக்கிழமை காலை காலை 7 மணி தொடக்கம், மாலை 4 மணி வரை 13,400 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெறும். 06▶

## “கழுத்தை அறுத்துக் கொல்வேன்” இராணுவ அதிகாரி மிரட்டல்



லண்டன், பெப்.06

இலங்கையின் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பிரிட்டனில் ஆர்ப்பாட்டம் செய்த புலம்பெயர் தமிழ் மக்களை “கழுத்தை அறுத்துக் கொன்றுவிடுவேன்” என்று இலங்கைப் படையதிகாரி ஒருவர் பகிரங்கமாக மிரட்டியுள்ளார்.

நேற்று முன் தினம் இலங்கைத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்ற போது, தூதரக அலுவலகத்தில் இருந்து வெளியே வந்த அதிகாரிகள், போராட்டக்காரரை அச்சுறுத்தும் வகையில், ஒளிப்படங்களையும், வீடியோக்களையும் எடுத்தனர்.

அப்போது இராணுவச் சீருடையில் அங்கு வந்த லெப்டினட் கேணல் பிரியங்க பெர்னாண்டோ என்ற படையதிகாரி, "கழுத்தை அறுத்துக் 06▶

## யாழ்ப்பாணம் வருகிறார் சம்பந்தன்



யாழ்ப்பாணம், பெப். 06

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாகத் தேர்தல் பரப்புரைக் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இடம் பெறும் இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் கலந்துகொள்ளவுள்ளார்.

இக்கூட்டத்தில் பங்கேற்பதற்காகவே அவர் இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார். (ச)

## காணோம்...! காணாமல் ஆக்கப்பட்டோரை!!

### யாழில் சொன்னார் ஜனாதிபதி



- ◇ வடக்கின் 60 வீத நிதி திரும்பி வந்தது
- ◇ யார் தவறு செய்தாலும் தண்டனை உறுதி
- ◇ மகிந்த ராஜபக்ஷ திருடன்
- ◇ காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நிதி

யாழ்ப்பாணம், பெப்ரவரி 06,

“காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எவரும் நாட்டின் எந்தப் பகுதியிலும் இல்லை. நன்றாக விசாரித்துத் தேடிவிட்டேன்” எனக் கைவிரித்து விட்டார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. 06▶

## 101 வயதானவர் உயிரிழப்பு



சாவகச்சேரி, பெப். 06

யாழில் 101 வயதுடைய முதியவர் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார். 06▶

## 67 குற்றவாளிகள் தேர்தலில் போட்டி

கொழும்பு, பெப்.06,

இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் மோசமான குற்றப் பின்னணி கொண்ட 67 பேர் வேட்பாளர்களாக உள்ளனர் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோகண ஹெற்றியாராச்சி இந்த விவரங்களை வெளியிட்டார்.

கொலைக் குற்றஞ் சாட்டப்பட்ட 11 பேரும், போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 3 பேரும், பாதாள உலகக் கோஷ்டியுடன் தொடர்புடைய 5 பேரும், ஊழல் குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய 5 பேரும், திருட்டுக் குற்றங்களுடன் தொடர்புடைய 06▶

## ஊஞ்சல் கயிறு இறுகி சிறுமி பரிதாப மரணம்

யாழ்ப்பாணம், பெப். 06

ஊஞ்சல் ஆடி விளையாடிக் கொண்டிருந்த சிறுமி கயிறு இறுகியதால் உயிரிழந்தார்.

கோப்பாயைச் சேர்ந்த சிவநேசன் அக்சயனி (வயது 9) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் நடந்த இச்சம்பவம் தொடர்பில் மேலும் அறிய 06▶

## பருத்தித்துறை - பொன்னாலை வீதி நேற்று திறக்கப்பட்டது



யாழ்ப்பாணம், பெப்.06,

பருத்தித்துறை - பொன்னாலை வீதி (ஏபி-21) நேற்று மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு வலி.வடக்கு பிரதேசத்தை இராணுவம் கைப்பற்றியபோது இந்த வீதியையும் கைப்பற்றியிருந்தது. 06▶

## புலனாய்வு அறிக்கையால் கலக்கத்தில் மைத்திரி

கொழும்பு, பெப்.06,

உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மோசமான பின்னடைவைச் சந்திக்கும் என்று புலனாய்வு அறிக்கைகள் தெரிவிப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு பேரிடியாக அமையும் எனக் கருதப்படுகிறது.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் தொடர்பாக வெளிவரும் கருத்துக்கணிப்புகளில் ஐ.தே.கவே வெற்றியீட்டும் என்றும், மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு மோசமான பின்னடைவு ஏற்படும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இதனால், உள்ளூராட்சி 06▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

# “போரில் வெல்ல அதிகம் பாடுபட்டேன்!”



**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ‘ஹிரு’ சிங்கள தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டி**

*கேள்வி: தேர்தல் மேடைகளில் இப்போது பாரதூரமான பேச்சுக்கள் பேசப்படுவதைக் காணுகின்றோம். அது தேசிய அரசுக்கு ஆபத்தானது இல்லையா?*

பதில்: நான் 47 வருடங்களாக இருந்த கட்சியில் இருந்து 2014 இல் வெளியே வந்தேன். அந்த அரசு அன்று பிழையான வழியில் சென்றதாலேயே அந்த முடிவை எடுத்தேன். எனது நண்பர் மகிந்தவை 2005 இல் ஜனாதிபதியாக்குவதற்கு என்னை விட யாரும் முன்னிலையில் இருக்கவில்லை. இறுதியில் அவரை வெல்ல வைத்தோம்.

அடுத்ததாக 26 வருடங்களாக ஒரு இலட்சத்துக்கும் அதிகமான உயிர்களைப் பறித்த போரை வென்றோம். அந்தப் போரை வெல்வதற்கும் நான் அதிகம் பாடுபட்டேன். 5 தடவைகள் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்கானேன். என்னைக் கொல்வதற்காகப் புலிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதல்களில் சிக்கி அப்பாவி பொதுமக்கள் பலர் உயிரிழந்தனர்.

யுத்தத்தின் இறுதி இரண்டு வாரங்கள் ஜனாதிபதி மகிந்த நாட்டில் இருக்கவில்லை. நான் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தேன். பிரதமர் உள்ளிட்ட மேலும் பல முக்கியஸ்தர்கள் நாட்டில் இருக்கவில்லை. புலிகள் தென் இந்தியாவில் காடுகளில் தாக்குதல் விமானங்களை ஒளித்து வைத்திருப்பதாகவும், புலிக்ளுக்கு அதிக ஆபத்து ஏற்பட்டால் புலிகள் அந்த விமானங்களில் வந்து கொழும்பைத் தாக்குவர் என்றும் எமக்குத் தகவல் கிடைத்தது.

அப்போது நான் கொழும்பில் இருக்கவில்லை. புலிகள் என்னைத் தேடக்கூடும் என்பதால் பொலனறுவைக்குச் சென்று பல்வேறு இடங்களில் மா்றி மாறி இருந்தேன். இவ்வாறு தியாகம் செய்துதான் யுத்தத்தை வென்றோம். யுத்தத்தை வென்றதன் பின் நல்லதொரு நாட்டை எதிர்பார்த்தோம்.

உலகில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கொரியா, ஜப்பான் மற்றும் வியட்நாம் போன்ற நாடுகள் யுத்தத்தின் பின் எப்படி முன்னேறுவது என்று எங்களுக்கு காட்டித் தந்துள்ளன. ஆனால், மகிந்தவைச் சுற்றி இருந்தவர்கள் கொடுத்த பிழையான ஆலோசனைகளால் யுத்தத்துக்கு உதவியவர்களை மறந்தார். நாட்டை முன்னேற்றுவதற்குத் தவறினார்.

யுத்தத்தின் பின் பல ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். பல ஊடக நிறுவனங்கள் தீ மூட்டப்பட்டன. ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு ஓடினர். தாஜூதீன் போன்ற நாட்டின் புகழ் மிக்க விளையாட்டு வீரர்கள் கொல்லப்பட்டனர். அமைச்சரவையில் அன்றைய விடயத்துக்கு அப்பால் எதனையும் பேச முடியவில்லை.

கட்சியின் செயலாளராக இருந்த எனது அதிகாரங்கள் அனைத்தையும் குடும்பத்துக்குள் முடக்கினர். சர்வதேசக் கொள்கையை மிதித்து நடந்தனர். இவ்வாறு நாட்டுக்கு விரோதமான, அதிகமான விடயங்கள் நடந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில்தான் நான் அதிலிருந்து விலகி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டேன்.

*கே: தேசிய அரசு இப்போது சரியான பாதையில்தான் செல்கிறதா?*

ப: சரியான பாதையில்தான் நடத்திச் செல்கிறேன். யார் ஊழல் புரிந்தாலும் அவர்களைத் தண்டித்து தேசிய அரசை நான் பாதுகாப்பேன். ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக இப்படிச் செய்வது சரியா என்று ஐக்கிய தேசியக் கட்சிக்காரர்கள் கேட்கின்றனர். ஊழல் புரிந்தால் யாராக இருந்தாலும் நான் பார்த்துக்கொண்டிருக்கமாட்டேன் என்று நான் அவர்களுக்குச் சொன்னேன்.

தேர்தலுக்காக நான் இப்படிச் செய்யவில்லை. தேர்தலுக்கு முதல் இருந்தே நான் ஊழலுக்கு எதிராகவே செயற்படுகிறேன். சிலர் அரசியலைப் பயன்படுத்தி பணம் சம்பாதிப்பதற்காகவே வருகின்றனர். பணம் சம்பாதிக்கும் ஒரு வழியாகவே அவர்கள் அரசியலைப் பயன்படுத்துகின்றனர். இதனால்தான் இந்த நாட்டை எம்மால் கட்டி எழுப்ப முடியாமல் உள்ளது.

*கே: பொருளாதாரத்தை ஐக்கிய தேசிய கட்சியின் கைகளில் இருந்து உங்களது கைக்கு எடுக்கப் போவதாக நீங்கள் கூறி இருப்பதன் அர்த்தம் என்ன?*

ப : தேசிய உற்பத்தி, விவசாயம், ஏற்றுமதி மற்றும் வாழ்க்கைச் செலவீனம் போன்றவற்றில் பிரச்சினைகள் உள்ளன. இவற்றில் நாம் வீழ்ச்சியடைந்துள்ளோம். இதனால் இதில் மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. அதை நான் நிச்சயம் செய்வேன்.

நான் இருந்த கட்சியில் இதுபோன்ற பிழைகள் இருந்ததனாலேயே நான் அங்கிருந்து வெளியேறினேன். இங்கும் அதுபோல் பிழைகள் இடம்பெறுவதற்கு அனுமதிக்க முடியாது. இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் அந்தப் புதிய கட்சியின் நோக்கம்கூட திருடர்களை மாத்திரம் பாதுகாப்பதுதான்.

எனக்குத் தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல் கிடையாது. மக்களின் நலன்களை அடிப்படையாக வைத்தே நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கின்றேன். இது தேசிய அரசுக்குச் சிக்கலாக அமையாது. தேசிய அரசுக்குப் பொருத்தமானவர்களை தயார்படுத்துவதில்தான் போய் முடியும்.

ஊழலுக்கு எதிராகப் போராடும் அத்தனை பேரையும் நாட்டுக்காக ஒன்றிணையுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன். இதனால்தான் நான் 10ஆம் திகதிக்கு பின் புதிய வேலைத் திட்டம் ஒன்றுக்குச் செல்வேன் என்று கூறுகிறேன்.

*கே: நீங்கள் கூறுகின்ற திருடர்களைப் பாதுகாக்கும் கட்சியில் உள்ளவர்களை உங்களுடன் வந்து இணையுமாறு ஏன் அழைப்பு விடுத்தீர்கள்?*

ப: ஊழலுக்கு எதிரான எனது கொள்கையை ஏற்பதற்கு அவர்கள் தயாரா என்று பார்ப்பதற்காகவே நான் அந்த அழைப்பை விடுத்தேன். அனால், அவர்கள் தொடர்ந்தும் அந்த ஊழல் குப்பை மேட்டில் இருக்கவே விரும்புகின்றனர். அவர்கள் திருந்துவதற்குத் தயாரில்லை.

*கே: “ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கையை எங்களால் ஏற்க முடியாது. அந்தக் கட்சியுடன் சுதந்திரக் கட்சி இணைந்திருக்கும்வரை எங்களால் சுதந்திரக் கட்சியுடன் இணையமுடியாது” என்று மகிந்த அணியினர் கூறுகின்றனரே?*

ப: பண்டாரநாயக்க கூட முதலாவது அரசை நிறுவியபோது அது சுதந்திரக் கட்சி அரசாக இருக்கவில்லை. 1951இல் மக்கள் ஐக்கிய கட்சியின் அரசையே அவர் அமைத்தார். பல கட்சிகள் இணைந்திருந்தன. இருந்தாலும் அவர்களின் வேறுபட்ட கொள்கைகளை ஒரு புறம் ஒதுக்கி வைத்துவிட்டு நாட்டுக்காக பொதுவான ஒரு கொள்கையின்கீழ் ஒன்றுபட்டனர். அதுதான் தேசிய அரசிலும் நடக்கின்றது.

*கே: நீங்கள் தொடர்ச்சியாக கூறி வருவது போல் பிணை முறித் திருடர்களுக்கு தண்டனை வழங்கப்படுமா என்ற சந்தேகம் எழுகின்றதே?*

ப: அவர்கள் நிச்சயம் தண்டிக்கப்படுவர் என்பதை மிகத் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதற்காக ஆணைக்குழுவை நான் அமைத்தபோது இது பிரச்சினையை மூடி மறைப்பதற்கான தந்திரோபாயம் என்று கூறினர். அந்த ஆணைக்குழு செயற்பட்ட விதத்தைப் பார்த்தபோது அதை விமர்சித்தவர்கள் அதை உருவாக்கியவர்கள் போல் பேசத் தொடங்கினர்.

ஆணைக்குழுவின் அறிக்கை வருவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே இது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவரையும் சட்டமா அதிபரையும் அழைத்துப் பேசினேன். அறிக்கை வந்ததும் தொடர்ந்தும் இதை முன்னெடுப்பதற்கான வழிவகைகள் பற்றி ஆராயுமாறு கூறினேன்.

அதற்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று தலைவர் சொன்னார். இல்லாவிட்டால் ஆணைக்குழு விசாரித்த சாட்சிகள் அனைத்தையும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மீண்டும் விசாரிக்க வேண்டிவரும் என்றும் கூறினார்.

அப்படிச் செய்தால் அதிக காலம் எடுக்கும். சாட்சியங்கள் மாறலாம். ஆகவே, ஆணைக்குழு அறிக்கையை அடிப்படையாக வைத்துக்கொண்டு லஞ்ச, ஊழல் ஆணைக்குழு நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக சட்டத்தைத் திருத்துமாறு உத்தரவிட்டேன்.

அதற்கான சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டு அந்தத் திருத்தச் சட்டமூலத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதை சட்டமாக்குவதற்காக நாடாளுமன்றத்துக்கு அனுப்புவோம்.

*கே: மத்திய வங்கியை பிரதமர் பொறுப்பேற்றது மற்றும் அர்ஜூனன் மகேந்திரனை ஆளுநராக நியமித்தது போன்றவற்றுக்கான பொறுப்பை உங்களால் ஏற்க முடியுமா?*

ப: சம்பந்தப்பட்ட அமைச்சரே அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். அர்ஜூனவை நியமிப்பதற்கான ஆலோசனை முன்வைக்கப்பட்டபோது

(05ஆம் பக்கம் பார்க்க)

எதிரொலி
Ethiroli
செவ்வாய், 06 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

## மாற்ற முடியாது

ஒவ்வொருவரினதும் நடத்தைகள் குறித்து விளக்க தமிழில் ஒரு கதை உண்டு.

ஒரு அரசன் பூனை ஒன்றை வளர்த்து வந்தான். அந்தப் பூனைக்கு மாமிசம் போடாமல், சைவ உணவு களையே உண்ணுமாறு அரசன் பழக்கி வைத்திருந்தான். இந்தச் சந்தர்ப்பத்தில் அரசனுக்கு திடீரென ஒரு சந்தேகம். உயிரினங்களின் செயற்பாடு பிறவிக்குணத்தால் வருகின்றதா அல்லது பழக்கவழக்கத்தால் வருகின்றதா என்பதே அந்தச் சந்தேகம். அப்போது பக்கத்தில் இருந்த மந்திரி, "பிறவிக்குணமே காரணம்" என்று சொல்லி விட்டார். அவ்வளவுதான். "நீர் சொன்னதை நிரூபிக்கா விட்டால் உன் தலை போய்விடும்" என்று சொல்லி விட்டான்.

மந்திரிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கவலையுடன் வீட்டுக்குப் போனார். நடந்ததைக் கேட்ட மந்திரியின் மனைவி ஒரு உபாயம் சொன்னாள்.

அடுத்த நாள் அரசவைக்கு மந்திரி சென்றார். "மன்னா! ஒவ்வொருவரினதும் நடத்தையை பிறவிக் குணமே தீர்மானிக்கிறது என்பதை இப்போது நிரூபிக் கிறேன்" என்று சொல்லி விட்டு, தன் பையில் கொண்டு வந்த எலி ஒன்றை வெளியே விட்டார். அவ்வளவுதான் தாமதம், அரசனின் மடியில் உட்கார்ந்திருந்த, 'சைவப் பூனை' சட்டெனப் பாய்ந்து எலியைக் கௌவிக் கொண்டு ஓடியது.

"மந்திரியாரே நீர் சொன்னதுதான். சரி. பழக்கவழக் கத்தை விடவும் பிறவிக்குணமே நடத்தையை முடிவு செய்கிறது" என்று மன்னர் ஒத்துக் கொண்டார்.

இதனை மீண்டுமொருமுறை இலங்கைப் படை யதிகாரி ஒருவர் நிரூபித்திருக்கிறார். இலங்கையின் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டு, புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது இலங் கைத் தூதரகத்தில் இருந்த லெப்பிடினட் கேணல் பிரியங்க பெர்னாண்டோ என்ற படையதிகாரி, 'உங்களை யெல்லாம் கழுத்தை அறுத்துக் கொல்லுவேன்' என்று சைகை மூலம் எச்சரித்துள்ளார். அத்தோடு, ஆர்ப் பாட்டக்காரர்களை, புகைப்படம் எடுத்தும், வீடியோப் பதிவு செய்தும் மிரட்டியுள்ளனர்.

சாதாரண ஒரு ஆர்ப்பாட்டத்தைக் கூட சகிக்க முடி யாமல், கொலை செய்யும் எண்ணம் வரப்பெற்ற இத்தகைய படையதிகாரிகள், தங்கள் பக்கத்தில் இழப் புகள் நேர்ந்த சமயத்தில், பிடிபட்டிருந்த மக்களையும், போராளிகளையும் எப்படியெல்லாம் கொலைவெறி யோடு அணுகியிருப்பார்கள் என்பது புலனாகின்றது.

குறித்த படையதிகாரி, இறுதிப்போரில் பல உயிர் களை வதைத்து, கொன்றொழித்த பிறவிக்குணத்தால், லண்டனுக்குப் போய், தூதரகத்துப் போய், ஒரு இராஜதந்திர அதிகாரியாக இருக்கும் போதும் தன் இயல்பை ஒளித்து வைக்க முடியாமல் சட்டென வெளிப் படுத்தியுள்ளார்.

உண்மையில் இதுவொரு பெரும் மனித உரிமை மீறல். ஒரு மக்கட் தொகுதியினர் ஜனநாயக வழியில், அனுமதி பெற்று, தமது கருத்தை வெளிப்படுத்தும் போது, அதனை அடக்கும் விதமாக இப்படிக் கொலை அச்சுறுத்தல் விடுப்பதென்பது இலங்கையில் சர்வ சாதாரணமாக இருக்கலாம். ஆனால் பிரிட்டனில் அப்படி யல்ல. இது குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, விசாரணை நடத்தப்பட்டால், குறித்த படையதிகாரி பிரிட்டனில் இருந்து நாடுகடத்தப்படவும் செய்யலாம். இப்படிக் கொலைவெறி கொண்ட இராணுவத்தினரை தூதரக அதிகாரிகளாக அனுப்பி, புலம்பெயர் தமிழர் களை வேவு பார்க்கும் இலங்கையின் போக்குக்கு இந்தச் சம்பவம் முற்றுப்புள்ளி வைத்து, இனிமேல் பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரத்தில் படையதி காரிகள் பணியாற்ற முடியாது என்று சட்டம் வந்தாலும் வரலாம் என்று கூறப்படுகின்றது.

கழுத்தறுக்க முற்பட்ட அதிகாரியின் கழுத்தே கடைசி யில் அறப்போவதுதான் பரிதாபம்!

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# பிணைமுறி மோசடி விவகாரம் நாடாளுமன்றில் இன்று விவாதம்

கொழும்பு, பெப்.06,

இன்று கூடும் நாடாளுமன்ற கூட்டத் துக்கு சகல உறுப்பினர்களையும் சமுக மளிக்குமாறு சபாநாயகர் கரு ஜெய சூரிய கேட்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கிணங்க நாடாளு மன்ற 14ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் பிரகாரம் இன்று காலை 10.30 மணிக்கு நாடாளுமன்றம் கூட வுள்ளது.

நேற்று நடந்த கட்சித்தலைவர்க ளின் கூட்டத்தில் இணங்கிக் கொண்ட படி மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் பாரிய ஊழல் மோசடி தொடர் பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மீதான விவாதம் இன்று நடை பெறவுள்ளது.

இதேபோன்று எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் விவாதங்களைத் தொடர்வதற்கு கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் உடன்பாடு எட்டப்பட்ட தாக பிரதியமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார். (இ)

## 'லப்டொப்' மலர்ச்செண்டானது!



கொழும்பு, பெப்.06

இலங்கையின் சுதந்திர தினத்தின் போது அறிமுகம் செய்யப்படவிருந்த லப்டொப் நடனம் பல்வேறு எதிர்ப்பு களால் மலர்ச்செண்டு நடனமாக அளிக்கை செய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினம் கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது இலங்கையில் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தை வெளிப்படுத்தும் வகையில், பாட சாலை மாணவிகளின் லப்டொப் மற்றும் தொலைகாட்டிகளுடான நடனம் அறிமுகம் செய்யப்பட விருந்தது.

இந்த முயற்சிக்குப் பலதரப்பின ரால் கடும் எதிர்ப்பு வெளியிட்ட நிலை யில், லப்டொப் நடனத்தை நீக்குவ தற்கு கல்வியமைச்சு உத்தரவிட்டது.

எனினும் பல நாட்களாக மாண விகள் பயிற்சியில் ஈடுபட்டமையி னால் நடனத்தை நீக்குவதில் சிக்கல் நிலை காணப்பட்டது. இதனால் லப் டொப் மற்றும் தொலைகாட்டி என்ப னவற்றுக்காக மலர்ச்செண்டுகளுட னேயே குறித்த நடனம் ஆடப்பட் டது.

இந்த மாற்றம் குறித்து பலரும் சமூக வலைத்தளங்களில் கருத்துக் களை வெளியிட்டு வருகின்றனர். (அ)

## மெண்டிஸ் 'குளோஸ்'!



கொழும்பு, பெப்.06

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரத்தில் சந் தேக நபரான அர்ஜூன் அலோசி யஸினால் நடத்தப்பட்டு வந்த டபிள்யூ.எம்.மெண்டிஸ் மற்றும் நிறுவனத்தின் உற்பத்தி நடவ டிக்கைகள், கடந்த ஒரு வார கால மாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தாகக் கூறப்படுகின்றது.

குறித்த நிறுவனத்துக்குச் சொந் தமாக, வெலிசர பிரதேசத்தில் காணப்படும் மதுபான உற்பத்தி நிலையத்தின் உற்பத்தி நடவடிக் கைகளே, இவ்வாறு நிறுத்தப்பட் டுள்ளதாகவும் இதனால், தற்கா லிகமாகச் சேவையில் ஈடுபட்டவர் களின் வேலைவாய்ப்பு பறிபோயுள் ளதாகவும் கூறப்படுகின்றது.

ஏற்கனவே அங்கு உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திகளே, தற் போது விநியோகிக்கப்பட்டு வரு வதாகவும் அலுவலக நடவடிக் கைகள்மாத்திரமேமுன்னெடுக்கப் பட்டுவதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. (அ)

# சுதந்திர தினத்துக்கு எதிராகப் போர்க்கொடி



லண்டன், பெப்.06

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினமான நேற்று முன்தினம் பிரிட்ட னில் புலம்பெயர் வாழ் தமிழர்களினால் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கபட்டது.

இலங்கையின் சுதந்திர தினம் தமி ழர்களின் கறுப்பு நாள் என்பதை காட் டும் வகையில் பிரிட்டனிலுள்ள இலங் கைத் தூதரகத்தின் முன்னால் நண்பக லிலும் பிரிட்டன்பிரதமரின் வாசஸ்தலத் துக்கு முன்னால் மாலையிலும் இரு பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

பிரிட்டன் நேரப்படி நண்பகல் 12 மணியளவில் தூதரகத்தின் முன் கடும் குளிரின் மத்தியிலும் ஒன்று திரண்ட பெருந் திரளான மக்கள் புலிக்கொடி களை கைகளில் ஏந்தியவாறு "அரசி யல்கைதிகளை விடுதலை செய்", "காணா மல் போன எம் உறவுகள் எங்கே?", "இன்று எம் சுதந்திரம் இருட்டாக்கப் பட்ட நாள்" போன்ற பல்வேறு கோஷங் களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து மாலைவேளையில் பிரித்தானிய பிரதமர் வாசல்தலத் திற்கு முன்னாள் நாடுகடந்த அரசாங் கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சுதந் திர எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் பெருமளவிலானோர் கலந்து எதிர்ப் பினை தெரிவித்தனர் என்பது குறிப் பிடத்தக்கது. (அ)

## இன்று நாளும் கோளும்

06.02.2018 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் தை மாதம் 24 ஆம் நாள்

ஷஷ்டி பி.ப. 01.15 மணி வரை | சித்திரை 03.45 வரை | சித்தயோகம்

இராகுகாலம் 03.00 - 04.30 | சுபநேரம் மு.ப. 07.30 - 08.30 | எமகண்டம் மு.ப. 09.00 - 10.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆக்கம் | அச்சம் | ஓய்வு | புகழ் | பிரீதி | ஊக்கம் | தனம் | நலம் | வெற்றி | போட்டி | தெளிவு | இலாபம் |

# மலைப்பாம்பும், முதலையும் கூட்டணியாக வீட்டுக்குள் !





வடமராட்சி, பெப்.06

வறணி கரம்பை குறிஞ்சியைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில் ஒரே சமயத்தில் மலைப்பாம்பும் முதலையும் வீட்டினுள் புகுந்ததால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்றுக் காலையே இந்த முதலை-மலைப்பாம்புக் கூட்டணி குறித்த வீட்டுக்கு படையெடுத்துள்ளன. எனினும் அவற்றைக் கண்ட வீட்டின் உரிமையாளர், அந்த இரண்டையும் சாதுரியமாகப் பிடித்ததால், பெரும் அனர்த்தம் ஒன்று தவிர்க்கப்பட்டது. நீர் நிலைகள் வற்றத் தொடங்கியுள்ளதால், முதலைகள் வறணிப்பகுதியில் ஊர்மனைகளுக்குள் புகுந்து கொள்வது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது (அ-11)

## மணல் கடத்தல் முறியடிப்பு



வடமராட்சி, பெப்.06

மணல் கடத்தல் முயற்சியொன்றை நெல்லியடிப் பொலிஸார் முறியடித்துள்ளனர்.

குடவத்தைப் பகுதியில் கோயிலுக்கு அருகாமையில் உள்ள வெளிப்பகுதியில் கடத்தலுக்காக 20 லோட் மணல் தயாராக இருந்தது. ஆயினும் இது குறித்து நெல்லியடிப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் படி அவ்விடத்துக்குச் சென்ற பொலிஸார் 20லோட் மணலையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். (அ- 11)





## பேரைக் கேட்டாலே சும்மா அதிருதில்ல...

வடமராட்சி, பெப்.06

வடமராட்சி, வதிரி அம்மன் கோவிலுக்கு அருகில் உள்ள தோட்ட வெளிப் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பரப்புரைக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைப் புகழ்ந்து பேசினர். ஒவ்வொரு முறையும் பிரபாகரன் என்றும், தலைவர் என்றும் பேச்சாளர்கள் சொல்கின்ற போது, கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஆரவார ஒலி எழுப்பினார்கள். (அ-11)

## குளிர்சாதனப் பெட்டிக்குள் எறும்புண்ணி மீட்பு

கொழும்பு, பெப்.06

கொள்ளுப்பிட்டி-வாலுகாராம வீதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றின் குளிர்சாதனப் பெட்டியிலிருந்து உயிருடன் ஆர்மடில்லா எனப்படும் எறும்புண்ணி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த எறும்புண்ணியை குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருந்த சீனாவைச் சேர்ந்த தலைமைச் சமையற்காரர் ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸ் அவசர அலைபேசி இலக்கமான 119 என்ற அழைப்புக்கு கிடைத்த தகவலுக்கமையவே, குறித்த ஆர்மடில்லாவைக் கைப்பற்றியதாகவும், இது 4 அடி நீளமும், 6 கிலோகிராம் நிறையையும் கொண்டது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(அ)

# தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனசீசியா பகுதி திறந்துவைப்பு





யாழ்ப்பாணம், பெப்.06

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் அனசீசியா பகுதி (உணர்வழித்தல் பகுதி), களஞ்சியம் என்பவற்றை, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி, யாழ்.மாவட்ட செயலர் நா.வேதநாயகன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் யோ.திவாகர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட செயலக மேலதிக அரச அதிபர் (காணி) முரளிதரன், தெல்லிப்பழைப் பிரதேச செயலர் சிவஸ்ரீ, வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், நோயாளர் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள் மற்றும் வைத்தியசாலைச் சமூகத்தினர் கலந்துகொண்டனர். சிவஞானசோதியால் 7 கோடி ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களும் இதன்போது கையளிக்கப்பட்டன. (அ)

# செல்லும் இடமெல்லாம் 119




எதைச் செய்தாவது–எதைக் கொடுத்தாவது–எதைக் கூறியாவது தேர்தலில் வென்றுவிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இன்று அதிகமான வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். இப்போதே ஒருவரை ஒருவர் காலை வாரிவிடும் வேலையையும் திறம்படச் செய்து வருகின்றனர்.

வாக்காளர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கமுடியாது. இலஞ்சம் வழங்க முடியாது போன்ற கடுமையான தேர்தல் சட்டங்களை தேர்தல் ஆணைக்குழு கடுமையாக அமுல்படுத்தி வருகின்றது. சிக்கினால் அவ்வளவுதான். வேட்பாளர் வெற்றி பெற்றாலும் பதவி பறிபோகும் என்று ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இந்தக் கடுமையான சட்டத்தை சாதமாகப் பயன்படுத்தி சில வேட்பாளர்கள் எதிர்த்தரப்பு வேட்பாளர்களுக்கு பெரும் தலையிடியைக் கொடுத்து வருகின்றனர். இந்தத் தலையிடியை அதிகம் எதிர்கொண்டு வருபவர் கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் ஹபீஸ் நஸீர் அஹமட்தானாம்.

அவர் தனது வேட்பாளர்களை அழைத்துக்கொண்டு வீடு வீடாகப் பிரசாரத்தில் ஈடுபடத் தொடங்கியதும் அந்த இடங்களுக்கு உடனடியாகப் பொலிஸார் வந்து நிற்கின்றனராம். விசாரித்துப் பார்த்தால் அவர் மக்களுக்கு பணம் கொடுப்பதாக 119 க்கு அழைப்புகள் வருகின்றனவாம். இது தனக்குப் பெரும் தலையிடியாக இருப்பதாக முன்னாள் முதல்வர் கூறிப் புலம்புகிறார்.

# பெண் வேட்பாளர் கட்சி தாவினார்

வவுனியா, பெப்.06

அகில இலங்கை தமிழர் மகா சபையின் சார்பில் போட்டியிடும் பெண் வேட்பாளர் ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவியுள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே, அகில இலங்கைத் தமிழர் மகாசபையின் சார்பில் வவுனியா நகரசபை ஆறாம் வட்டாரத்தில் போட்டியிடும் திவர்சனா செல்வகுமார் என்பவரே இவ்வாறு கட்சி தாவியவராவார்.

"அகில இலங்கைத் தமிழர் மகா சபையிடம் சரியான ஒழுங்குபடுத்தலிலான திட்டங்கள் எதுவும் இல்லாததினாலேயே அந்தக்கட்சியில் இருந்து நான் விலகியுள்ளேன். அத்துடன் வட்டாரம் ஆறில் போட்டியிடும் ஐக்கிய தேசிய கட்சியின் தம்பாப்பிள்ளை பிறமேந்திரராஜாவுக்கு ஆதரவாகச் செயற்படவுள்ளேன்" என்று குறித்த கட்சி தாவிய வேட்பாளர் தெரிவித்தார்.

இதன்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் இணை ஒருங்கிணைப்பாளர் தம்பாப்பிள்ளை பிறமேந்திரராஜா மற்றும் கட்சி ஆதரவாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# வடமராட்சியில் கூட்டமைப்புக் கூட்டம்





வடமராட்சி, பெப்.06

வடமராட்சி, வதிரி இரும்புமதவடியில், தமிழ்தேசிய கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவரின் வீட்டில் நடைபெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டார்கள்.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிறிதரன், வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து உரையாற்றினர். (அ- 11)



# திருப்பியும் அவர்தான் வேணுமெண்டு அவ சொல்லுறா, நல்லதாம்?

எலக்சன்ரை நாளும் கிட்டக்கிட்ட வந்திட்டுது. கன பேருக்கு ரென்ஸனாம். சிலபேருக்கு பிறசர் வந்து குளிசையும் போடத்துவங்கி விட்டினமாம் எண்டு பேப்பர் கடையடியிலை கதைச்சவை. உவை பதவி ஆசை பிடிச்ச வருத்தக்காரர். பேசாமல் வீட்டை படுத்துக்கிடக்கிறதுக்கு, தேவையில்லாத வேலை. இந்தமுறை ஒருத்தருக்கும் முழுசாக் கிடைக்காதாம். எல்லாம் தொங்கு பாலமாத்தான் வருமாம். அப்பிடி வந்தால் நல்லது எண்டும் வீட்டுக்காரற்றை துள்ளலுக்கு உது ஒரு பாடமா் இருக்கும் எண்டதும் பேப்பர் கடையடிக் கதைதான். நாங்கள் எல்லாத்தையும் கேப்பம். எல்லாத்தையும் கதைப்பம். புள்ளடி போடேக்கை மட்டும் புத்தியா யோசிச்சுக் கவனமா இருப்பம், என்ன? எண்டு முதலி சொன்னவன்.

நேற்றைக்குச் சந்தியிலை நடந்த கூத்தையும் நான் உங்களுக்குச் சொல்ல வேணும். உவன் தருமன் ஆற்றையோ நாலாஞ் சடங்குக்குப் போய் நல்லா ஊத்திப்போட்டுச் சைக்கிளிலை வந்திறங்கினான். சந்தியிலை ஒட்டிக் கிடந்த எலக்ஸன் போஸ்டர் ஒண்டைக் கண்ட உடனை அவனுக்கு வெறி தலைக்கடிச்சுப்போட்டுது. துவங்கினானே பேச. ஒரு பாட்டம் மழை பெய்து ஓஞ்ச மாதிரிக் கிடந்திது. அப்பப்பா...??

உவன் இரண்டு மூண்டு நாளைக்கு முன்னம் வீரசிங்க மண்டபத்திலை மகிந்தான்ரை கூட்டம் எண்டு கேள்விப்பட்டுப் பாக்கப் போனவனாம். மகிந்தாவையும் பாத்திருக்கிறான். ஆரோ ஒரு பெண்பிள்ளை மகிந்தாவுக்கு மாலை போட்டதைக் கண்டிட்டான். எங்கடை தமிழ் மரபிலை கட்டின புருசனுக்குத்தானே ஒரு பொம்பிளை மாலை போடுறது. உதென்ன புதுப்பழக்கம் பழகிறாங்கள் எண்டு துவங்கி அந்த மாலையைப் போடப் பண்ணினவன்ரை ஆறேழு வம்சத்தை இழுத்து நல்ல அருச்சனை. "தமிழரைப் பொறுத்தவரை நடந்த சண்டையிலை லட்சக்கணக்கான தமிழ் ஆக்களை ஒரு கிழமையிலை கொண்டு குவிச்சவன் உந்த மகிந்தாவும் அவன்ரை சகோரங்களும். அவங்களுக்கு ஒரு தமிழ் பொம்பிளையின்ரை கையாலை மாலை கேக்குதோ? எங்கடை பரதேசியளுக்கும் மானம், ரோசம் இல்லை. இருக்க வேண்டியவன் இல்லாமல் போட்டான். அதுதான் உந்தக் "கூத்து". எண்டு தருமன் பொயின்ட் பொயின்ட்டாக் கேட்டவன். வெறி எண்டாலும் அவன் சொல்லுறதிலை ஞாயம் இருக்கெண்டுதான் சனம் கதைச்சவை.

அதோடையாம் பொதுசன முன்னணியின்ரை கட்சியிலை வலி தெற்குப் பிரதேச சபையிலை போட்டி போடுற சுசித்தா அந்தக் கூட்டத்திலை பேசேக்கை "முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவை மக்கள் வெறுக்கவில்லை. ஒரு மாற்றத்துக்காகத்தான் அவரை தோக்கப் பண்ணினவை. இப்ப இருக்கிற அரசாங்கம் மக்களைப் பற்றிக் கவலைப் படுகிறதில்லை. அவை பிணைமுறி, ஊழல் மோசடி எண்டு தான் பேசிக்கொள்ளுகினம். அதாலை நாங்கள் கட்டாயம் மகிந்தாவை மீண்டும் ஜனதிபதியாகக் கொண்டு வரவேண்டிய தேவை இருக்கு. அதாலை அவருக்கு வாக்களியுங்கோ? எண்டு சொன்னவவாம்.

அதுக்குத் தருமன் என்ன சொல்லுறான் எண்டால், "பிணைமுறியிலை பிரச்சினை எண்டால் விசாரிக்கிறதுதானே முறை. உவ சொல்லுறதைப் பாத்தால் கண் காணாமல் கையை விட்டிட்டு இருக்க வேணும் எண்டு சொல்லுறமாதிரி எல்லே கிடக்கு. அடுத்தது ஊழல் விசாரணை எண்டு சொல்லிறா, ஆர் அந்த ஊழலைச் செய்தது. அவவின்ரை அன்புத் தலைவரும் அவற்றை பரிவாரங்களும் தானே? றோட்டைப் போட்டுக் காட்டியே நாட்டைக் குட்டிச் சுவராக்கிப் போட்டுப் போனவங்களைப் பற்றி விசாரிக்காமல், என்ன தொட்டில் கட்டி ஆட்டச் சொல்லுறாவோ, உந்த அம்மையார்? அவவின்ரை குடும்பத்திலை ஒருதரையும் ஆமிக்காரன் சுடேல்லைப் போலை கிடக்கு. கற்பழிக்கேல்லைப் போல கிடக்கு. கடத்திச் சாக்காட்டேல்லை போல கிடக்கு. இல்லாட்டி முந்தி ஏதேனிலை பங்கோ தெரியேல்லை? அதோடை, அந்தக் குடும்பம் கைநனைக்காத விசியம் என்ன? பஞ்சமா பாதகத்தை, கைகூசாமல் கையாண்ட சனமெல்லே! எல்லாத்திலையும் அடி அடிச்சது தானே? குடும்பமாவும், கண்டவன் நிண்டவன் எல்லாரும்தானே அடிச்சவை. எல்லா திணைக்களத்தின்ரை கொம்பியூட்டர் தொடர்பையும் அலரி மாளிகைக்கு உள்ளை வைச்சுக் கொண்டு அடிச்ச பெருமை அந்தக் குடும்பத்தைத் தானே சாரும். ஐநூறு ரூபாப் பெற்றோலோடை காரிலை போய் வாறதுக்கு, எழுபத்தையாயிரம் ரூபா செலவழிச்சுப் பக்கத்திலை இருக்கிற மஹரகமவுக்குப் பிளேனிலை போய் வந்தாளே, சண்டாளி. இது கடவுளுக்கு அடுக்குமோ? உதெல்லாம் தருமன் சொல்லிக் கத்தின விசியங்கள்தான். அவன்ரை வாயை மூட நாங்கள் பட்டபாடு. அவன்ரை தூசணத்தைக் கேட்டுக் காதுச் சவ்வு கிழிஞ்சுபோச்சுது. பழசை மனதிலை வைச்சுக் கொண்டு கறுவுறது கூடாதுதான். எண்டாலும் உச்சக் கட்ட அயோக்கியரைத் திருப்பிக் கொண்டு வர வெளிக்கிடுறது எவ்வளவு கூடாதெண்டது உந்த நாதாரியளுக்குத் தெரியாதோ?

- வில்லங்கம் விநாசி

# "போரில் வெல்ல அதிகம் பாடுபட்டேன்!"

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதை நான் எதிர்த்தேன். அவர் வெளிநாட்டுப் பிரஜையாக இருப்பதாலும் அவரை விடவும் சிறந்த பொருளாதார நிபுணர்கள் எமது நாட்டில் இருப்பதாலுமே நான் அதை எதிர்த்தேன்.

இரண்டாவது தடவை அவரை நியமிக்க முயற்சி செய்தபோது அதை நிராகரித்தேன். கடும் சண்டை பிடித்துத்தான் நான் குமாரசுவாமியை ஆளுநராக நியமித்தேன்.

*கே: உங்கள் பதவிக் காலம் தொடர்பில் நீங்கள் நீதிமன்றின் முடிவை எதிர்பார்த்தது ஏன்?*

ப: எனக்கு முன்பிருந்த இரண்டு ஜனாதிபதிகளும் இவ்வாறு வினவியுள்ளனர். நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதியின் பதவிக் காலங்கள் நாட்டின் அபிவிருத்தியை அடிப்படையாகக்கொண்டு முக்கியத்துவம் பெறுகின்றன.

நான் அதிகாரிகளை அழைத்து நீண்டகால வேலைத் திட்டங்களை வகுத்தபோது அவர்கள் உங்கள் பதவியின் ஆயுட்காலத்தை அடிப்படையாக வைத்துத்தான் திட்டத்தை வகுக்க வேண்டும் என்று கூறினார்கள். ஆதலால் உங்கள் பதவிக் காலம் ஐந்து வருடங்களா, அல்லது ஆறு வருடங்களா? என்று அறிந்ததன் பின்பே திட்டத்தை வகுக்க முடியும் என்றனர். இதனால்தான் நான் நீதிமன்றிடம் இது தொடர்பில் வினவினேன்.

*கே: முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் பிரஜா உரிமை நீக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுவது தொடர்பில் நீங்கள் உடன்படுகிறீர்களா?*

ப: நான் தனிப்பட்ட நபரை அடிப்படையாக வைத்து எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கமாட்டேன். பொதுவாகவே நடவடிக்கை எடுப்பேன். ஒருவர் தொடர்பில் பொலிஸ் அல்லது நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கும்போது நான் தலையிடுபவன் அல்ல. அது எனது கொள்கையல்ல. ஆகவே, நீங்கள் சொல்கின்ற விடயத்துக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

*கே: தேர்தல் முடிவுகள் உங்களது நோக்கத்தோடு எந்தளவு ஒத்துப்போகும்?*

ப: நான் இப்போது கூறுகின்ற விடயங்களை நிறைவேற்றுவதற்கு இந்தத் தேர்தலின் ஊடாக என்னைப் பலப்படுத்துமாறு நான் மக்களிடம் கேட்டுக்கொள்கிறேன். ஊழல், மோசடியற்ற –குடும்ப ஆட்சியற்ற ஒரு நாடாக இந்த நாடு முன்னோக்கிச் செல்வதற்கு மக்கள் எமது கட்சியை ஆதரிக்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தா விட்டால் ஊழல்வாதிகள் பலமடைந்து விடுவார்கள். நாட்டை முன்னேற்றுவதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாய்ப்புத்தான் இந்தத் தேர்தல். இந்த இடத்தில் நாம் பிழை விட்டால் வரலாற்றில் என்றுமே இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாத ஒரு நிலை ஏற்படும். முன்னைய ஆட்சியாளர்கள் அவர்களின் பிழையைத் திருத்திக்கொள்ளவில்லை. அதே ஊழல் மனோநிலையிலேயே உள்ளனர்.

*கே: 10 ஆம் திகதியின் பின்னர் அமைச்சரவை மாற்றம் இடம்பெறுமா?*

ப: 10 ஆம் திகதியின் பின் பல முக்கிய தீர்மானங்களை எடுக்கவுள்ளேன். இனி மாற்றம் ஒன்று அவசியமாகின்றது. அது என்னவென்று வெளிப்படையாகப் பேசுவதற்கு நான் தயாரில்லை.நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்றால் தற்போதைய நிலையில் மாற்றம் ஏற்பட்டே ஆக வேண்டும்.

*கே: உங்களின் அரசியல் எதிர்காலம் எப்படி அமையும்?*

ப: எனது எதிர்காலத்தைப் பற்றி நாளை என்ற நாளைப் பற்றி – நான் கவலைப்பட்டதில்லை. அதற்காக என்னைத் தயார்படுத்தியதில்லை.இந்த ஜனாதிபதி பதவி கூட நான் திட்டமிட்டு இருந்ததில்லை. தானாக வந்தது.பொது வேட்பாளராகப் போட்டியிடுமாறு சந்திரிகா என்னிடம் கேட்டபோது நான் சிரித்தேன். நான் நாட்டைப்பற்றி மட்டுந்தான் சிந்திக்கின்றேன்.

நாளை எனக்கு என்ன செய்ய வேண்டும் என்று நான் சிந்திப்பதில்லை. நாட்டுக்கு என்ன செய்ய வேண்டும் என்றே முடிவெடுக்கின்றேன்.

*கே: நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்படுமா?*

ப : நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் தொடர்ந்தும் இருக்கின்றேன். இதை நாடாளுமன்றம்தான் செய்ய வேண்டும்.

**தமிழாக்கம்: எஸ்.சுரேஷ்**




# ரயிலுடன் மோதியது லொறி நால்வர் பலி: எண்மர் காயம்


அங்குலானை, ஜன. 06

ரயிலுடன் லொறி மோதிய விபத்தில் நால்வர் உயிரிழந்தனர். சீனப் பெண் உட்பட 8 பேர் காயமடைந்தனர்.

அங்குலானையில் நேற்று மாலை 5 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. மருதானையிலிருந்து களுத்துறை நோக்கி பயணித்த ரயிலுடன் மோதிய இந்த விபத்தில் ரயிலின் மிதிபலகையில் பயணித்த நால்வர் உயிரிழந்தனர்.

இதில் காயமடைந்த 8 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தனர். காயமடைந்தவர்களுள் சீனாவை சேர்ந்த பெண்ணொருவரும் உள்ளார். (இ)

## இன்றைய கேலிச்சித்திரம்



# தொண்டர் ஆசிரியர்க்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், பெப்.06,

வடக்கு மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர்களாகவும், ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களாகவும் பணியாற்றுவோருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு வரும்15ஆம்திகதி அலரிமாளிகையில்நடைபெறவுள்ளது. 2009ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் சுமார் பத்து வருடகாலம் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிய 182 பேருக்கும், அதற்குச் சமமான காலத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய 142 ஆசிரியர்களுக்குமே இவ்வாறு நியமனம் வழங்கப்படவுள்ளது.

வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயின் வேண்டுகோளை ஏற்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மூலம் முன்வைக்கப்பட்ட குறித்த நியமனம் தொடர்பான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (இ)

# அடம்பிடிக்கிறார் மகிந்த

கொழும்பு, பெப்.06,

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிபந்தனைகளுக்கு இணங்கினால் மட்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோடு பேச மகிந்த ராஜபக்ச தயாராக இருக்கிறார் எனக் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.தே.கவுடனான கூட்டு அரசாங்கத்தில் இருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விலக வேண்டும் என்றும், பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்க வேண்டும் என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கோரி வருகின்றது. அத்துடன், மகிந்த ராஜபக்ச பிரதமராக நியமிக்கப்பட வேண்டும் என்றும் அதன் சில உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

எனினும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் எந்தவொரு உறுப்பினருடனும்தாம்பேசத்தயாராக இல்லை என்று ஜனாதிபதி தொலைக்காட்சி செவ்வி ஒன்றில் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## தொடர்ச்சிகள்

### காணோம்.. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடக்கவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு திரட்டுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று யாழ்ப்பாணம் வந்தார். யாழ். மாநகர சபை மைதானத்தில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இந்த விடயத்தை வெளிப்படுத்தினார்.

அங்கு அவர் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் - வடக்கைச் சேர்ந்தவர்கள் என்னை சந்தித்து உரையாடியுள்ளனர். காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் உறவினர்கள் இராணுவ முகாம்,சிறைகள்,காடுகளில்மறைத்துவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தனர். அரசாங்கம் என்ற வகையில் அவர்கள் எங்கும் இல்லை. காணாமல் ஆக்கப்பட்டோரின் பெற்றோருக்கு நிதி உதவி வழங்க வேண்டும் என்றால், அதை நிச்சயம் வழங்குவோம்.

போரால் வடக்கில் காணாமல் போனவர்கள் போன்று தெற்கிலும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களில் பலர் காணாமல் போயிருக்கின்றனர். என்னிடம் ஒளிக்கவோ, மறைக்கவோ எதுவும் இல்லை. எதையும் பகிரங்கமாக பேசுவேன். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினை பெரியது. அரசு என்ற வகையில் என்னால் செய்யக்கூடிய அனைத்தையும் நியாயமான முறையில் செய்வேன்.

அரசாங்கத்தால் வடக்குக்கு வழங்கப்படும் பணம் திரும்பிவருகிறது. 2017ஆம்ஆண்டு மீள்குடியேற்றத்துக்காக அனுப்பிய பணத்தில் 60 வீதமான பணம் செலவு செய்யப்படவில்லை. அதை நாங்கள் வீடு கட்டுவதற்காக வழங்கியிருந்தோம். இதில் நான் பொய் சொல்லவில்லை. அது குறித்த கணக்குகளைப் பார்க்கலாம். பணம் திரும்பி வந்தமைக்கு அரசியல் கட்சிகளுக்கு இடையிலான ஒற்றுமையின்மையே காரணம்.

அரசியல் செய்யும்போது களவு செய்யக்கூடாது. அரசாங்கத்தின் பணம் - மக்களின் பணம். அதை அரசியல்வாதிகள் களவு செய்கின்றனர். மகிந்த ராஜபக்ஷ காலத்தில் எவ்வளவு பணம் களவாடப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியும். நாம் நியமித்துள்ள ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மூலம் அது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. மத்திய வங்கியில் கொள்ளையடித்த சிலர் அரசாங்கத்திலும் இருப்பதாகக் கூறப்படுகின்றது. முன்னைய அரசாங்கத்துக்கும் இன்றைய அரசாங்கத்துக்கும் வேறுபாடு இல்லை. யார் தவறு செய்தாலும் அவர்களுக்கு வேறுபாடின்றி தண்டனை வழங்குவேன்.

இன்று (நேற்று) காங்கேசன்துறை - பருத்தித்துறை வீதியை விடுவித்துள்ளோம். படையினர் வசமுள்ள 75 வீதமான காணிகளை மக்களிடம் கையளித்து விட்டோம். ஏனைய காணிகளை விரைவாக விடுவிப்போம். இந்த விடயத்தில் நான் மிகக் கவனமாக செயற்பட்டு வருகிறேன்.

நாட்டில் தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் அனைவரும் சகோதரர்கள் போன்று பயமில்லாது - சந்தேகம் இல்லாது நிம்மதியாக வாழ வேண்டும் என்பது எனது கனவு. அந்தக் கனவை நனவாக்க அனைவரினதும் ஒத்துழைப்பும் வேண்டும். (ச -இ)

### 67 குற்றவாளிகள்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10 பேரும் இதில் அடங்குகின்றனர்.

மதுபானம் விற்பவர்கள், மரக் கடத்தலில் ஈடுபடுபவர்கள், நிதிக் குற்றங்களில் ஈடுபட்டோர், மண் அகழ்வுக் குற்றங்களில் ஈடுபட்டோர், வாங்கிய கடனைச் செலுத்தாதவர் ஆகியோரும் இவர்களில் உள்ளடங்குகின்றனர்.

இவர்கள் கம்பகா, கொழும்பு, கேகாலை, காலி, இரத்தினபுரி, குருணாகல் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பவ்ரல் தெரிவித்துள்ளது. (இ)

### புலனாய்வு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைகளிலும், ஐதேக- சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து கூட்டு ஆட்சியை அமைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மொத்தமுள்ள 341 உள்ளூராட்சி சபைகளில், ஐக்கிய தேசியக் கட்சி 225 உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி 40 இற்கும் அதிகமான சபைகளைக் கைப்பற்றும். வடக்கு, கிழக்கில் தமிழ், முஸ்லிம் கட்சிகள், 50இற்கும் அதிகமான சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றும். ஜே.வி.பி.ஒரு சபையில் கூட வெற்றி பெறாது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் 7 இற்கும் குறைந்த சபைகளையே கைப்பற்ற முடியும் என்றும் அந்த புலனாய்வு அறிக்கைகளில் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, அஞ்சல் மூல வாக்களிப்பின் போது, முப்படையைச் சேர்ந்த பலரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கே வாக்களித்துள்ளனர் என்றும், பொலிஸாரின் அஞ்சல் வாக்குகள் பெரும்பாலும், ஐக்கிய தேசியக் கட்சிக்கே அளிக்கப்பட்டுள்ளதாகவும் புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்துள்ளன. (இ)

### 101 வயதானவர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி தனக்கிளப்பை பிறப்பிடமாக கொண்ட வரும் கலாசாலை வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நமசிவாயம் என்பவரே உயிரிழந்தவராவர்.

ஓய்வு பெற்ற கிராம சேவையாளரான முதியவர் கடந்த 1917 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி பிறந்தார். இவர் கடந்த ஆண்டு தனது 100 ஆவது பிறந்த நாளை தனது பிள்ளைகள் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுடன் கொண்டாடி மகிழ்ந்தார்.

இவருக்கு 11 பிள்ளைகளும் , 33 பேரப்பிள்ளைகளும் , 12 பூட்டப்பிள்ளைகளும் உள்ளனர்.

அந்நிலையில் கடந்த ஒரிரு மாதங்களாக சுகவீனம் உற்று இருந்த நிலையில் நேற்றைய தினம் மதியம் உயிரிழந்தார்.

### நாளை நள்ளிரவுடன்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் முடிந்ததும், 4 மணிக்குப் பின்னர் அந்தந்த வாக்களிப்பு நிலையங்களிலேயே வாக்குகள் எண்ணப்படும். வாக்கு எண்ணும் நிலையத்தில் இருந்து 400 மீற்றருக்குட்பட்ட பிரதேசத்துக்குள் வெளியாட்கள் நுழைவதற்கோ, தங்கியிருப்பதற்கோ அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஆயுதம் தாங்கிய பாதுகாப்பு அதிகாரிகளுடன் அமைச்சர்களையோ, நாடாளுமன்ற உறுப்பினர்களையோ, வாக்களிப்பு நிலையங்களுக்குள் அனுமதிக்கக் கூடாது என தேர்தல்கள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும், துப்பாக்கி ஏந்திய இரண்டு பொலிஸார் நிறுத்தப்படுவர். யாரேனும், வாக்குப்பெட்டிகளைக் கைப்பற்ற முனைந்தால், அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தும் ஆணையை பொலிஸ் மா அதிபர் வழங்கியுள்ளார். (இ)

### பருத்தித்துறை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் உயர் பாதுகாப்பு வலயமாக வலி. வடக்கு அறிவிக்கப்பட்டபோது இந்த வீதியும் அதற்குள் அடங்கியது.

அண்மைக்காலத்தில் வலி.வடக்கின் பிரதேசங்கள் பல விடுவிக்கப்பட்டன. அச்சமயம் இந்த வீதியின் பெரும்பகுதி விடுவிக்கப்பட்டபோதும், சுமார் மூன்றரை கிலோமீற்றர் நீளமான வீதியை இராணுவம் தொடர்ந்தும் தன் கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தது.

இவ்வீதியை விடுவிக்குமாறு தொடர்ச்சியாக மக்கள் விடுத்த கோரிக்கையின் பயனாக நேற்று யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த வீதியை திறந்து வைத்தார்.

இந்த வீதி திறக்கப்பட்டதன் மூலம் 50 கி.மீற்றர் தூரத்தை சுற்றிக் கடக்கும் நிலை இல்லாது போயிருப்பதாக மக்கள் மகிழச்சியுடன் தெரிவித்தனர். (ச - இ)

### கழுத்தை அறுத்துக்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொன்றுவிடுவேன்"என்று சைகை மூலம் ஆர்ப்பாட்டக்காரர்களை பலமுறை மிரட்டினார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஜனநாயக வழியில் எதிர்ப்பை வெளியிட்டவர்கள் மீது, இவ்வாறு அச்சுறுத்தும் வகையில் ஒரு தூதரக அதிகாரி செயற்பட்டமைக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாக புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தெரிவித்துள்ளன. (அ)

### ஊஞ்சல்.. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவதாவது:

பெற்றோர் வீட்டில் இல்லாத சமயம் சிறுமி ஊஞ்சல் ஆடி விளையாடியுள்ளார். அவர்கள் வீட்டுக்குத் திரும்பிய போது, ஊஞ்சல் கயிற்றில் சிறுமி இறந்து கிடந்தார். அவரின் கழுத்தை ஊஞ்சல் கயிறு இறுக்கியிருந்தது.

சிறுமியை மீட்ட பெற்றோர் அவரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். ஆனால் அவர் முன்னரே உயிரிழந்து விட்டார் என வைத்தியர்கள் தெரிவித்திருந்தனர். (இ)

# தலயுடன் அனல்



சென்னை, பெப்.06

அஜித்தின் விசுவாசம் படத்தின் படப்பிடிப்பு பெப்ரவரி 22 ஆம் திகதி தொடங்க இருக்கிறது. படத்தின் பூஜையின் போது எடுக்கப்படும் புகைப்படங்களைப் பார்க்க ரசிகர்களும் ஆவலாக உள்ளனர்.

இந்த நிலையில் இந்தப் படத்தைப் பற்றி ஒரு புதிய தகவல் வந்துள்ளது. விசுவாசம் படத்தின் சண்டைக் காட்சிகளை அனல் அரசு கவனிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.

இவர் ஏற்கனவே வேலாயுதம், ஜில்லா, கீத்தி, மெர்சல் என நிறைய விஜய் படங்களில் பணிபுரிந்துள்ளார்.

இந்தத் தகவல் உண்மையானால் அனல் அரசு அஜித்துடன் இணைந்து பணி புரியும் முதல் திரைப்படம் இதுவே. (அ)

# இந்திய மீனவர்களை பிடித்தது பா்கிஸ்தான்

இஸ்லாமாபாத், பெப்.06

எல்லை மீறி வந்து மீன் பிடித்ததாக 47 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் கடற்படை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பாகிஸ்தான் கடற் பகுதிக்குள் வந்து அவர்கள் மீன்பிடித்ததாகவும், அதனால் அவர்களைக் கைது செய்ததாகவும் பாகிஸ்தான் கடற்படை பாதுகாப்பு அமைப்புத் தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி 19 ஆம் திகதியும் இதே போன்று, எல்லை மீறி மீன்பிடித்ததாக 17 இந்திய மீனவர்களைப் பாகிஸ்தான் கடற்படையினர் பிடித்துச் சென்றனர். கடந்த டிசெம்பரில், நல்லெண்ண அடிப்படையில் 292 இந்திய மீனவர்களைப் பாகிஸ்தான் விடுதலை செய்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)



# மாலைதீவில் அரசியல் குழப்பம்

மாலைத்தீவு, பெப்.06

பெரும் அரசியல் நெருக்கடி காரணமாக, எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தைக் கைப்பற்றி விடக்கூடும் என்ற அச்சத்தில், மாலைத்தீவில் இராணுவத்தினர் கட்டுப்பாட்டுக்குள் நாடாளுமன்றம் கொண்டுவரப்பட்டுள்ளது.

பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி முகமட் நஷீத் உள்ளிட்ட ஒன்பது பேரை விடுவிக்குமாறு மாலைதீவு அரசுக்கு அந்நாட்டு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 9 பேர் மீதும் அரசியல் உள்நோக்கத்துடன் வழக்குத் தொடரப்பட்டதாக உயர்நீதிமன்றம் கூறியது. மேலும், ஜனாதிபதி அப்துல்லா யாமீன் கயூம் தலைமையிலான மாலைதீவு முன்னேற்றக் கட்சியிலிருந்து விலகிய 12 எம்.பி.க்களின் தகுதி நீக்கம் செல்லாது எனவும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதையடுத்து, அந்த 12 பேருக்கும் மீண்டும் பதவி வழங்க வேண்டிய சூழல் நாடாளுமன்றத்துக்கு ஏற்பட்டுள்ளது.

ஆனால் குறித்த 12 பேருக்கும் எம்.பி. பதவி வழங்கப்பட்டால், அவர்களுடன் இணைந்து எதிர்க்கட்சிகள் பெரும்பான்மை பலம் பெற முடியும் எனவும், ஜனாதிபதி அப்துல்லா யாமீனுக்கு எதிராக தீர்மானம் கொண்டு வந்து அவரைத் தகுதி நீக்கம் செய்ய முடியும் எனவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து நாடாளுமன்றத்தைக் காலவரையின்றி முடக்குவதாக மாலைதீவு அரசு அறிவித்துள்ளது. சிறையில் அடைக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர்களை விடுவிக்குமாறு தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடைந்து வருகின்றன. சிறையில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்களை விடுவிக்க உத்தரவிட்டும், விடுவிக்காத அரசைக் கண்டித்து எதிர்க்கட்சியினர் போராட்டம் அறிவித்திருந்த நிலையில் நாடாளுமன்றத்தை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது. (அ)

# ரயில் விபத்தில் இருவர் சாவு



கரோலினா, பெப்.06

அமெரிக்காவின் தென் கரோலினாவில் பயணிகள் ரயில் ஒன்று விபத்துக்குள்ளானதில் 2 பேர் பலியாகினர். 100 பேர் காயமடைந்தனர்.

இதுகுறித்து அமெரிக்க ரயில் துறை அதிகாரிகள் தரப்பு, "நியூயோர்க்கிலிருந்து மியாமி மாகாணம் செல்லும் ரயில் பாதையில் பயணிகள் ரயில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை விபத்துக்குள்ளானது. இதில் அந்த ரயிலில் இருந்த இரு ஊழியர்கள் பலியாகினர்.

பயணிகளில் நூற்றுக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். காயமடைந்த அனைவரும் அருகிலுள்ள நான்கு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூன்று பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. அதிகாலை வேளையில் போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தால் இந்த விபத்து நடந்துள்ளது" என்று கூறியுள்ளனர். (அ)

# குழந்தையைக் காக்க தாய்ப்பால் விற்பனை

பீஜிங், பெப்.06

தனது கைக்குழந்தையின் மருத்துவக் கட்டணத்தைச் செலுத்துவதற்காக சீனாவிலுள்ள இளம்பெண் ஒருவர் தனது தாய்ப்பாலை விற்பனை செய்வது பலத்த சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ளது.

மருத்துவமனையில் தீவிர சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ள தங்களது இரட்டைக் குழந்தைகளில் ஒன்றுக்கான மருத்துவக் கட்டணத்தை உடனடியாகத் திரட்டுவதற்காகவே தனது தாய்ப்பாலை விற்பதாக அந்த இளம் பெண் கூறியுள்ளார்.

இதுகுறித்துப் பேசிய அந்த இளம் பெண்ணின் கணவர், தாங்கள் ஏற்கனவே அந்த மருத்துவமனைக்கு பல்லாயிரக்கணக்கான யுவான்கள் அளிக்க வேண்டியுள்ளதாகவும், குழந்தையின் உடல்நிலை சரியானவுடன் குறைந்தபட்சம் ஒரு லட்சம் யுவான்களாவது அளிப்பதற்கு தயாராக இருக்குமாறு மருத்துவர்கள் கூறியுள்ளதாகவும் தெரிவிக்கிறார்.

சீனாவில் சமீபத்திய ஆண்டுகளில் மருத்துவ மையங்களின் எண்ணிக்கை அதிகமாகி வந்தாலும், உடனடியாக மருத்துவ சேவையைப் பெறுவதற்கு அதிகப்படியான பணம்




செலுத்த வேண்டிய சூழல் நிலவுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்தத் தாயின் காணொளிகளை இணையத்தளங்களில் காண்பவர்கள் பெரும்பாலும் தங்களது அனுதாபங்களைத் தெரிவித்தும், "பாலை விற்று, குழந்தையைக் காப்பாற்றுங்கள்" என்பது போன்ற கருத்துக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

ஆயினும், தாய்ப்பாலை விற்று நிதி திரட்டும் இந்த நடவடிக்கையைக் கண்டித்துள்ள சிலர், இதை "உதவி கேட்பதற்கான மோசமான வழி" என்று விமர்சித்துள்ளனர். (அ)

# சாம்சங் தலைவர் விடுதலை

தென்கொரியா, பெப்.06

முன்னாள் தென்கொரிய அதிபருக்கு இலஞ்சம் கொடுத்த வழக்கில் சிறைத் தண்டனை பெற்ற சாம்சங் தலைவர் ஜே ஒய் லீ விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தென் கொரியாவின் மேல் முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. லீக்கு விதிக்கப்பட்ட ஐந்தாண்டு சிறைத் தண்டனையையும் நீதிமன்றம் நீக்கியுள்ளது.

சாம்சங் குழுமத் தலைவர் ஜே வொய் லீ மீது லஞ்ச, ஊழல் மோசடி வழக்குகளில் கடந்த ஆண்டு குற்றம் சுமத்தப்பட்டது.

சாம்சங் குழுமத் தலைவர் உள்ளிட்ட நான்கு முக்கிய தலைவர்கள் மீது மோசடி, திட்டமிட்ட ஊழல் வழக்குகள், தென் கொரிய அதிபராக இருந்த பார்க் குய்ன் ஹைக்கு இலஞ்சம் கொடுத்ததாக புகார் எழுந்ததையடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு தென் கொரிய நாட்டையே அரசியல் ரீதியாக உலுக்கிய வழக்காகும்.

இதில் லீ கடந்த வருடம் பெப்ரவரி 7 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் அவருக்கு ஐந்து ஆண்டு சிறை தண்டனையை நீதிமன்றம் விதித்தது. இந்த வழக்கில் தென் கொரிய அதிபரும் சிறைத் தண்டனை பெற்றிருக்கிறார்.

உலக அளவில் மிகவும் பிரபலமாகத் திகழும் சாம்சங் குழும சொத்துக்கு வாரிசுகளில் ஒருவர் ஜே ஒய் லீ.

சாம்சங் குழுமத்தின் மூன்றாம் தலைமுறையைச் சேர்ந்தவராவார். தந்தை லீ குன் ஹீ-க்கு வயதானதைத் தொடர்ந்து குழும நிறுவனங்களுக்கு இவர் தலைமைப் பொறுப்பை ஏற்றார். கொரியாவின் மிகுந்த வசதி படைத்த குடும்பங்களில் இவரது குடும்பமும் ஒன்றாகும். (அ)

# இலங்கை முதலிடம்

சிட்டகொங், பெப்.06

டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு இன்னிங்ஸில் அதிக ஓட்டங்கள் குவித்த அணிகள் பட்டியலில் ஏற்கனவே முதலிடத்தில் உள்ள இலங்கை, மீண்டும் ஒரு மைல்கல்லைத் தொட்டுள்ளது.

நேற்று முன் தினம் நடைபெற்ற இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்தது.

இதன்போது முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 9 விக்கெட்கள் இழப்புக்கு 713 ஓட்டங்கள் குவித்தது.

இது டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு இன்னிங்ஸில் எடுக்கப்பட்ட 18 ஆவது அதிகபட்ச ஓட்டங்களாகும். இதனால் அதிக தடவைகள் ஒரு இன்னிங்ஸில் 700 க்கும் அதிக ஓட்டங்கள் குவித்த அணி என்ற சாதனையை இலங்கை படைத்துள்ளது. இதுவரை இலங்கை அணி 6 தடவைகள் இவ்வாறு ஒரே இன்னிங்ஸில் 700 ஓட்டங்களைக் கடந்துள்ளது. (அ)

# விலகினார் டி கொக்



கேப்டவுன், பெப்.06

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி-20 தொடரில் இருந்து தென்னாபிரிக்க அணியின் விக்கெட் காப்பாளர் குயின்டன் டி கொக் காயம் காரணமாக விலகியுள்ளார்.

ஏற்கனவே டிவில்லியர்ஸ், டூபிளசிஸ் இல்லாத நிலையில், தடுமாறிவரும் தென்னாபிரிக்கா அணி, டி கொக்கும் இல்லாமையால், அடுத்துவரும் 3 ஆவது ஒருநாள் போட்டி சுவாரஸ்யமில்லாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி டெஸ்ட், ஒருநாள், ரி-20 தொடர்களில் விளையாடுகிறது. டெஸ்ட் தொடரை 2-1 என்று தென்னாபிரிக்கா கைப்பற்றியது.

6 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இதுவரை நடந்த இருபோட்டிகளிலும் வென்று 2-0 என்று இந்திய அணி முன்னிலை வகிக்கிறது.

ஏற்கனவே காயம் காரணமாக முதல் 3 போட்டிகளுக்கு விளையாடாமல், முக்கிய வீரர் டிவில்லியர்ஸ் ஓய்வில் இருக்கிறார். முதல் ஒருநாள் போட்டியின் போது ஏற்பட்ட காயம் காரணமாக, அணித்தலைவர் டு பிளசிஸ் ஒருநாள் மற்றும் ரி-20 தொடரில் இருந்து விலகினார்.

இந்நிலையில் டி கொக்கின் விலகல் தென்னாபிரிக்க அணிக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன் மூன்றாவது போட்டியின் விறுவிறுப்பும் இல்லாமல் போகும் தன்மை உண்டாகியுள்ளது. (அ)

# போலிங்கர் ஓய்வு

சிட்னி, பெப்.06

அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வீரரும், இடதுகை வேகப்பந்துவீச்சாளருமான டக்கி போலிங்கர் அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று அறிவித்தார்.

36 வயதான போலிங்கர் கடந்த 2009 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் அவுஸ்ரேலிய அணியில் அறிமுகமானார். இதுவரை 12 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள போலிங்கர் 50 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு வெலிங்டனில் நடந்த நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 28 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 5 விக்கெட் வீழ்த்தியமை இவருக்குச் சாதனையாக அமைந்தது.

ஒருநாள் போட்டிகளைப் பொறுத்தவரை இதுவரை 39 போட்டிகளில் பங்கேற்றுள்ள போலிங்கர் 62 விக்கெட்டுகளை சாய்த்துள்ளார். ஒன்பது, ரி-20 போட்டிகளில் விளையாடிய போலிங்கர் 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஆஷஸ் போட்டித் தொடரிலும் போலிங்கர் விளையாடியுள்ளார். கடைசியாக கடந்த 2011 ஆம் ஆண்டு டர்பனில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடினார். ஐ.பி.எல் தொடரில் 2010 ஆம் ஆண்டு சென்னை சுப்பர் கிங்க்ஸ் அணியில் போலிங்கர் இடம் பெற்று இருந்தார். இதேபோல், ஹோபர்ட் ஹரிகேன்ஸ், சிட்னி தண்டர்ஸ், சிட்னி சிக்சர்ஸ் அணியிலும் போலிங்கர் விளையாடியுள்ளார். 124 முதல்தர போட்டிகளில் விளையாடியுள்ள போலிங்கர் 411 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். (அ)

# சாப்பிடலாம் வாங்க!



கேப்டவுன், பெப்.06

கடந்த ஞாயிறன்று தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடைபெற்ற 2 ஆவது ஒருநாள் போட்டியில் 118 ஓட்டங்கள் என்ற இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு வெற்றி பெற ஓட்டங்களே தேவை என்ற நிலையில், திடீரென உணவு இடைவேளையை நடுவர்கள் அறிவித்தமை புதிய சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

இதனால் களநடுவர்களான அலீம்தார் மற்றும் அட்ரியன் ஹோல்ட்ஸ்டாக், ஆட்ட நடுவர் ஆன்டி பைகிராப்ட் ஆகியோரை பலரும் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

ஐ.சி.சி. விதிமுறைகளின் படியே உணவு இடைவேளை அறிவிக்கப்பட்டது என்பது மிகப்பெரிய கேலிக்கூத்து என்று பலரும் கருத்து தெரிவித்தனர்.

முறையான உணவு இடைவேளை நேரத்தில் இந்திய அணி 15 ஓவர்களில் 93ஃ1 என்று வலுவான நிலையில் இருந்தது. இதனையடுத்து நடுவர்கள் 15 நிமிடங்கள் கூடுதல் நீட்டிப்பு செய்தனர், அந்த 15 நிமிடங்கள் முடிந்த நிலையில் இந்திய அணி 117/1 என்று வெற்றிக்கு 2 ஓட்டங்களே தேவை என்ற நிலையில் இருந்தது.

அப்போதுதான் அனைவரும் கடுப்பாகும் விதமாக நடுவர்கள் உணவு இடைவேளைக்குச் செல்வோம் என்று அறிவித்தனர். மைதானத்தில் ரசிகர்கள் கிளம்பத் தொடங்கினர். ஆட்டம் மீண்டும் தொடங்கிய போது மைதானத்தில் ரசிகர்கள் ஏறக்குறைய இல்லை என்று கூற வேண்டும்.

வர்ணனையாளர் மைக்கேல் ஹோல்டிங் கூறும்போது, "கிரிக்கெட்டை இன்னும் விறுவிறுப்பாக்க முயன்றனர், ஆனால் இது முட்டாள்தனமானது. " என்றார். (அ)

# ஆர்சனல் அபாரம்



லண்டன், பெப்.06

இங்கிலாந்து உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டிகளில் ஆர்சனல், மன்செஸ்டர் யுனைட்டெட் ஆகிய அணிகள் வென்றன.

ஆர்சனல் அணி, 5-1 என்ற கோல் கணக்கில் எவெற்றன் அணியை வென்றது. ஆர்சனல் அணி சார்பாக, ஆரோன் றம்ஸி மூன்று கோல்களையும் லோரண்ட் கொஷியென்ஸ்கி, பியர் எம்ரிக் அபுமெயாங் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர். எவெற்றன் சார்பாகப் பெறப்பட்ட கோலை டொமினிக் கல்வேர்ட்-லூயின் பெற்றார்.

மன்செஸ்டர் யுனைட்டெட், 2-0 என்ற கோல் கணக்கில் ஹட்டெர்ஸ்பீல்ட் டௌணை வென்றது. மன்செஸ்டர் யுனைட்டெட் சார்பாக, றொமேலு லுக்காக்கு, அலெக்ஸிஸ் சந்தேஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

மன்செஸ்டர் சிற்றி, பேர்ண்லி ஆகிய அணிகளுக்கிடையிலான போட்டியில், இரண்டு அணிகளும்தலா ஒவ்வொரு கோலைப் பெற்ற நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. மன்செஸ்டர் சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை டனிலோ பெற்றதோடு, பேர்ண்லி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜொஹன் பேர்க் குட்முண்ட்சன் பெற்றார். (அ)



# தடை ஏன்?

புதுடெல்லி, பெப்.06

கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க வாழ்நாள் தடைவிதித்ததை எதிர்த்து இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த் தாக்கல் செய்த மனு மீது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை 4 வாரங்களுக்குள் பதில் அளிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

கடந்த 2013 ஆம் ஆண்டு நடந்த ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டித் தொடரில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியில் இடம் பெற்றிருந்த ஸ்ரீசாந்த் சூதாட்டத்தில் ஈடுப்பட்டதாகக் கூறி கைது செய்யப்பட்டார். அதைத் தொடர்ந்து, ஸ்ரீசாந்த்துக்கு கிரிக்கெட் விளையாட இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வாழ்நாள் தடைவிதித்து.

இந்த உத்தரவை எதிர்த்து, தாக்கல் செய்யப்பட்ட மனு மீது தீர்ப்பளித்த கேரள உயர் நீதிமன்றம், ஸ்ரீசாந்த் மீதான வாழ்நாள் தடையை நீக்க உத்தரவிட்டது.

ஆனால், இந்த உத்தரவை எதிர்த்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தாக்கல் செய்த மனுவை விசாரித்த கேரள உயர் நீதிமன்றம், கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் அளித்த தீர்ப்பில் ஸ்ரீசாந்த் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நடத்தும் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஒதுங்கி இருக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து ஸ்ரீசாந்த் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு மனுத் தாக்கல் செய்யப்பட்டு இருந்தது. அந்த மனு நேற்று உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுவை விசாரணை செய்த நீதிமன்றம், ஸ்ரீசாந்த்தின் மனுவுக்கு 4 வாரங்களுக்குள் பதில் அளிக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது. (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 06.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.